வர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து அந்தமாதிரியான தண்டனை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தேவையற்ற கேள்வி. இதற்குப் பதில் அளிக்கவேண்டிய தேவையில்லை.

(ஆ) திருப்பூரில் உள்ள துணி ஆலைகளின் கழிவு நீரை நொய்ய லாற்றை நோக்கியோடும் வாய்க்கால்களிலும், ஓடைகளிலும் வெளியேற்றுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சுப்பராயன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். திரு. பொ. உத்திராபதி அவர்கள் திரு. கு. சுப்பராயன் அவர்களின் சார்பாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்கள்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நொய்யலாற்றில் கெமிக்கல் கலந்த டையிஸ் மற்றும் சலவைப் பட்டறைத் தண்ணீர் தொடர்ந்து விடப்படுவதால் ஆற்றின் இருபுறமுள்ள குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகள் கடுமையாகப் பாதிக்கப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருப்பூரிலும், அதைச் சுற்றிலும் ஏறக்குறைய 90 துணி ஆலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் நெசவு நூலையும், துணியையும் உற்பத்தி செய்கின்றன. நூலை அல்லது துணிகளை வெளுத்தலும், மெருகூட்டலும், சாயமிடுதலும், செய்யப்படுகின்றன. செய்முறையில், இத்தொழிற்சாலைகள், வெளுப்புத் திரவம், சோடா சாம்பல், எரிகாரம், ஹைட்ரோ-குளோரிக் அமிலம், கந்தக

1986 மே 6] [டாக்டர் எச். வி. ஹண்டே]

அமிலம், டரை சோடியம் பாஸ்பேட், ஹைட்ரஜன்-பெர்ராக்சைட் உப்பு, பல்வேறு சாயங்கள் முதலியனவுமான இரசாயனங்களைப் பயன்படுத்துகின்றன. செய்முறையால் வெளிப்படுத்தப்படும் கழிவு நீரானது இயல்பில் காரமுள்ளதாகவிருக்கிறது. அக்கழிவுநீர், கரையாத திடப்பொருட்கள், மிதக்கும் திடப்பொருட்கள், இரசாயன உயிரகத் தேவை முதலியன கொண்டுள்ளது. அநேகத் தொழிற்சாலைகள் தமது கழிவுநீரை நிலத்திலோ, நொய்யலாற்றை நோக்கியோடும் வாய்க்காலிலோ ஓடைகளிலோ வெளிவிடுகின்றன.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப் பிரிவு 26-ன்படி, ஏற்கனவே செயலிலுள்ள தொழிற்சாலைகள் கழிவுநீரை வெளிவிடுவதற்காக இவ்வாரியத்தின் இசைவைப் பெற வேண்டும். இதுவரை, திருப்பூரிலும் அதைச் சுற்றிலுமுள்ள 59 தொழிற்சாலைகள் வாரியத்தின் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளன. மேற்படி சட்டப்பிரிவின் காப்புரைகளுக்கு இணங்குமாறு மற்ற தொழிற்சாலைகளுக்கு அறிக்கை விடப்பட்டுள்ளது. 31 தொழிற்சாலைகளுக்கு இசைவளிக்கப்பட்டு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கு தக்கபடி தேவையான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிப்பிட்ட காலத் தவணைக்குள் நிறுவுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளன. இதுவரை நான்கு தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளன. மேலும் ஏழு தொழிற்சாலைகளில், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான வேலையின் முன்னேற்றம் இவ்வாரியத்தினால் கண்காணிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலத் தவணைக்குள் வாரியத்தின் அனுமதி வேண்டி விண்ணப்பிக்கத் தவறியமைக்காக, திருப்பூரிலும் அதைச் சுற்றிலுமுள்ள நூல் மற்றும் துணிகளைச் செய்முறைப்படுத்தும் ஏழு தொழிற்சாலைக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேற்படி வழக்குகள் திருப்பூர் சார்நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வாரியம் இப்பொருள் குறித்துக் கண்காணித்து வருகின்றது. இன்னும் அநேக தொழிற்

சாலைகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறும், சுத்திகரிக்கப் படாத கழிவுநீர் நொய்யலாற்றில் விடப்படாமல் நிறுத்தப்படு வதை உறுதிசெய்யுமாறும், அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

3. வரவு-செலவுத் திட்டம், 1986 87, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார் பாக இந்த மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே தொடர்ந்து சட்டசபைக் கூட்டம் ஏறத் தாழ 8 ஆண்டுக்காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பல்வேறு கேள்விகள் கேள்வி நேரத்தின்போது இங்கே கேட்கப்படுகின்றன. ஆனால் இங்கே போலீஸ் துறை சம்பந்தமாக எந்த கேள்வியும் கேட்கப்படுவதில்லை; எடுத்துக்கொள்ளப் படுவதில்லை; விவாதிக்கப்படுவதில்லை என்ற நிலைமை இருப்பது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு விரோதமல்லவா? அரசாங்க அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் பற்றிய தகவல்களைத் தெரிந்துக்கொள்வதற்காகத்தானே இந்த நேரத்தை நாம் பயன் படுத்துகிறோம். எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கே போலீஸ் அமைச்சர் இருக்கிறார். அவர் பதில் சொல்லா விட்டாலும் பரவாயில்லை. நிதியமைச்சர் இருக்கிறார். அவராவது பதில் சொல்லலாம். ஆகவே இந்த 8 ஆண்டுகாலமாகத் திட்டமிட்டு என்ன நோக்கத்தாலோ போலீஸ் சம்பந்தமான கேள்விகள் எடுக்கப்படாமல் இருப்பது கண்டிக்கத் தகுந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன் காவல் துறையைச் சார்தவர்களுக்கெல்லாம் மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்குகிற திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது அந்த அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. 24 கிலோ அரிசி தரப்பட்டதற்குப் பதிலாக 12 கிலோதான் தரப்படு